# தேம்பாவணி காப்பியத்தில் எண்வகையான மெய்ப்பாடுகள்

**தே.ராஜசீலி**
பேராசிரியை,
தமிழ்த்துறை,
ஜெ.அ.மகளிர் தன்னாட்சிக்கல்லூரி, பெரியகுளம்.

## 1.முன்னுரை:

கிறித்தவர்களின் தமிழ்ப்பணி என்ற சிந்தனையில் கண்முன் முதலில் நிற்பவர் தமிழ் முனிவர் என்று அழைக்கப்படும் வீரமாமுனிவரே ஆவார். தமிழில் தோன்றிய பல இலக்கிய வகைகளைத் தந்தவர் இவர். இத்தாலி நாட்டில் பிறந்து வளர்ந்த வீரமாமுனிவர் தமது முப்பதாம் வயதில் தமிழகம் வந்து முப்பத்தாறு ஆண்டுகள் தமிழரோடு தமிழராக வாழ்ந்தார். இவர் தமிழகத்தில் வாழ்ந்த காலத்தில் ஒரு சமயத்தொண்டராகத் திகழ்ந்தார். இவரின் அற்புதப் படைப்புத் தான் தேம்பாவணி.

கிறித்தவ விழுவிய கருத்துக்கள் இடம் பெறும் தேம்பாவணியில் எண்வகை மெய்ப்பாடுகள் இடம் பெற்றுள்ளன. இந்த மெய்ப்பாடுகளை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## 2.எண்வகைச் சுவைகள்

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, என்ற எட்டும் காப்பியத்திற்குப் பெருமை சேர்ப்பவை. இவற்றை தொல்காப்பியர்

*"நகையே அழுகை இளிவரல் மருட்கை*
*அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று*
*அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப"[1] (தொல்: பொருள்.1196)*

என்று கூறுகின்றார். இத்தகைய எண்வகைச் சுவைகளில் ஒன்றோ இரண்டோ குறைந்து வந்தாலும் அவை பெருங்காப்பியத்தின் தன்மையில் இருந்து குறையாது என்பதை தண்டியலங்கார ஆசிரியர்

*"கூறிய உறுப்பில் சில குறைந்து இயலினும்*
*வேறுபாடு இன்று என விளம்பினர் புலவர்"[2]*

என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு காப்பியங்களில் இத்தகைய சுவைகள் தேம்பாவணியில் இடம்பெற்று வருகின்றது.



Scanned by CamScanner

2.1 நகைச்சுவை

சூதேயா நாட்டுச் சோலை ஒன்றில் மயில்கள் நடனம் ஆட அதை பறவை இனங்கள் கண்டு மகிழ்ந்தன. மயில்களின் ஆட்டத்தைக் கண்ட கருங்குரங்கு தானும் கூத்தாடுகின்றதாம். இக்காட்சியைக் காண முடியாத குவளை மலர்கள் ஒழிந்து கொள்ள இடம் இல்லாமல் அங்கும், இங்கும் அலைய இதனைக் கண்ட முல்லை மலர்கள் சிரிக்கின்றதாம். இந்தக் கூத்தைக் கண்ட காந்தள் மலர்கள் சலித்து கொட்டாவி விடுவது போன்று இருக்கின்றதாம். மயில்கள் நடந்து வருவது போல பெண்கள் அச்சோலையில் வருவதைக் கண்டு சாயலிலும் நடையிலும் பெண்கள் தங்களை வெற்றி பெற்று விட்டார்கள் என்று நாணி மயில்கள் மரக்கொம்புகளில் மறைகின்றதாம். இதனைப் பார்த்த பறவை இனம் சிரிப்பது போன்று இருக்கின்றது என்பதை வீரமாமுனிவர்.

*“குயில்துணைக்கலன் எனக் கப்பில் துங்கு அலர்,*

*குயில் துணை குயிலவும், குழல் வண்டு ஊதவும்”*[3]

என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு தேம்பாவணி காப்பியத்தில் நகைச்சுவை சிறந்து விளங்குகிறது.

2.2 அழுகைச்சுவை

சூதேயா நாட்டில் கொடுங்கோலன் ஏரோதன் கட்டளையால் குழந்தைகள் கொல்லப்படுகின்றனர். குழந்தைகளை இழந்த தாய்மார்கள் “என் கண்ணே! என் உயிர்க்கு அமுதமே என் இதயமே என் உயிர்க்கு

இனிமையே என் உயிர் போனால் நானும் உயிர் வாழ்வேன்”[4] என்று கதறி அழுகின்றார்கள்.

செந்தாமரை மலரில் உள்ள தம் குஞ்சுகளைக் கொடிய பறவைகள் தூக்கிச் சென்றால் அன்னங்கள் அழுது புலம்பும். அதுபோல சூதேயா நாடு இருந்தது. இதனைக் கண்ட மரியாளும் வளனும்,

*“கொழுமலர்ப் பள்ளிப் பார்ப்பு*

*கொடியபுள் பறிப்ப அன்னம்”*[5]

என்று வருந்துகின்றார்கள். இவற்றைக்கண்டு கிளி, அன்னம், மலர், காற்று போன்ற இயற்கையும் வருந்துகின்றது. இவ்வாறு குழவிகள் வதைப்படலமும், மகவைக் காண் படலமும் அழுகைச் சுவை மிகுந்து காணப்படுகின்றது.

2.3 இளிவரல் சுவை

மரியாள் இயேசுவிடம் நோய்வாய்ப்பட்டு வாடும் வளனது நோயைத் தணிக்குமாறு வேண்டுகின்றார் என்பதை வீரமாமுனிவர்



Scanned by CamScanner

*"வேண்டும் என்பதும் வேண்டுவது ஆக்கலும்,*
*யாண்டும் ஒன்று என யாவும் இயற்றினோய்,*
*நீண்டு நொந்து நின் தாதை படும் துயர்*
*கண்டு, உளம் கனியாது கொலோ"*[6]

என்று கூறுகின்றார். எல்லோருக்கும் அருள்புரியும் இயேசு தம் தந்தை நெடுநாளாய்த் துன்புறுவது கண்டு இரங்காமல் இருக்கின்றாரே என்று மரியாள் கூறும் போது இளிவரல் சுவை அமைந்து இருக்கின்றது.

### 2.4 மருட்கைச் சுவை

மரியாள் விருப்பத்தோடு பெற்று எடுத்த ஒளிமிகுந்த திருமகனுக்கு உரிய கொடி இது என்று, முன்னே வேதநூல்கள் கூறிய வண்ணம் ஒரு புதிய விண்மீன் தோன்றி கடவுள் பிறந்த செய்தியை அறிவித்தது என்பதை வீரமாமுனிவர்.

*"கண் எழுந்த கவின் காட்டிக் கதிர்*
*பொங்கு நவ மீனை, கடவுள் தானே,*
*மண் எழுந்த நாளில், அருமறை*
*நாப் போல் தோற்றுவித்து, வழங்கல் செய்தான்"*[7]

என்று கூறுகின்றார். இவ்வாறு தேம்பாவணியில் மருட்கைச் சுவை இடம்பெற்று வருகின்றது.

### 2.5 அச்சச்சுவை

சவூல் என்ற அரசனை எதிர்க்கும் பிலித்தேயருள் கோலியாத் என்னும் கொடிய அரக்கன் வருகின்றான். ஆறரை அடி உயரமுடைய அவன் ஒரு கரிய மலைபோன்று தோன்றுகிறான். நெடிய உயரம் உடைய அவன் கருமேகம் போன்ற தோளும் நீள் ஈட்டியும் கொண்டு மிகுந்த சினம் கொண்டு வருகின்றான். அவனது உருவத்தைக் கண்ட அனைவரும் அஞ்சி நடுங்குகின்றனர். கோலியாத்தின் உருவத்தை வீரமாமுனிவர்

*"பெரிய குன்றமோ? பேய் அதோ? பூதமோ? ஏதோ?*
*உரியது ஒன்று இலா உருவினைக் கண்ட உளி வெருவி"*[8]

என்று வருணிக்கின்றார். இவ்வாறு தேம்பாவணியில் வளன் சனித்த படலத்தில் அச்சச் சுவை அழகுற இடம் பெறுகின்றது.

### 2.6 பெருமிதச் சுவை

தேம்பாவணியில் பெருமிதச் சுவையைக் கூறும்போது வீரமாமுனிவர் தொடியன் அசிரீயனை அழைக்கின்றார். தொடியன் அசிரீயனை தன் கையால் அவன் முன்கையைப் பற்றிக் கொடிய மீனைக் கொன்றதற்கும், பேய்களை விலக்கியதற்கும், கண்களைக்



Scanned by CamScanner

குணமாக்கியதற்கும் நன்றியைக் கூறி வானுலக மேன்மையை அடைந்தாய் என்பதை வீரமாமுனிவர்,

*"காதை வாய் மடங்கச் செய்தாய்! கடிப் புகழ் இங்கண் வித்தி,*

*மதை வாய்ப்பெருஞ்சீர் வான் மேல் விளைத்திமற்று அறிய நானோ?"*[9]

என்கிறார். இவ்வாறு தேம்பாவணியில் பெருமிதச் சுவை இடம்பெற்று வருகின்றது என்கின்றார்.

## 2.7 வெகுளிச் சுவை

வீரமாமுனிவர் தேம்பாவணியில் கோலியாத், தாவீதை இகழ்ந்து கூறுவதைப் பற்றிக் கூறும்போது கோலியாத் அடே நீ என் எதிரே நிற்கத்தகுமோ, யானை முன் நாய் போர் புரிதல் நடக்குமோடா, அடே நான் சினங்கொண்டு வாய் திறந்து பெருமூச்சு விட்டால் நீ இவ்வுலகத்தை விட்டுவிட்டு மறு உலகிற்கே சென்று விடுவாயடா என்பதை வீரமாமுனிவர்,

*"நீ, அடா, நிற்பதோ? மதம் மொழி கரிமேல்*

*நாய், அடா, வினை நடத்துமோ? கதம் கொடு நானே"*[10]

என்று கூறுகின்றார். இவ்வாறு தேம்பாவணியில் இளிவரல் சுவை இடம்பெற்று வருகின்றது.

## 2.8 உவகைச் சுவை

தேம்பாவணியில் குழந்தை இயேசு பிறந்த போது விண்மீன்களும், கதிரவனும் ஏழு மடங்காக தன் கதிர்களைப் பரப்பியது என்றும், பெரிய மரங்கள் இனிய கனிகளைப் பரப்பி இருந்தது என்றும், வானவர் குழந்தையின் அடியை வணங்கி நின்றார்கள் என்றும், ஒருபக்கம் சந்தனச் சாந்தும், மற்றொரு பக்கம் கஸ்தூரியும், ஒரு பக்கம் அகிற் கட்டையின் புகையும் நிறைந்து இருந்தது என்றும், பூவில் இருந்து எழும் மணம் போல மகனைப் பெற்றெடுத்த மரியாள் தன் மகனின் கண்களோடு தன் கண்ணும் கலந்த போது பகலவனைக் கண்ட முழு மதிபோல தோன்றினாள் என்பதை வீரமாமுனிவர்,

*"எதிர் கொள் வெஞ் சுடர் காண் முழு இந்து எனா,*

*முதிர் கொள் இன்ப முகத்து விளங்கினாள்"*[11]

என்று கூறுகின்றார். இவ்வாறு தேம்பாவணியில் உவகைச் சுவை இடம்பெற்று சிறப்புற அமைந்துள்ளது.

## 3. முடிவுரை



Scanned by CamScanner

இலக்கியத்தின் சுவை கூட்டுவதற்காக எட்டுவகையான மெய்ப்பாடுகளை கவிஞர் கையாண்டுள்ளார். இங்ஙனம் மெய்ப்பாடுகளைக் கையாளுவதில் பிறரைப் பின்பற்றாமல் மெய்ப்பாடுகளை இக்காப்பியத்தில் தந்துள்ளார் வீரமாமுனிவர். ஆகவே படிப்போர்க்கு மேலும் சுவை கூட்டுவதாக அமைந்துள்ளது இக்காப்பியம்.

## 4. அடிக்குறிப்புகள்

1. இளம்பூரணர் உரை, ‘தொல்காப்பியம்’, ப.347.
2. வ.த.இராம.சுப்பிரமணியம், ‘தண்டியலங்காரம்’, ப.30
3. வி.மரிய அந்தோணி, ‘தேம்பாவணி’, ப.37
4. மேலது., ப.67
5. மேலது., ப.153 – 154
6. மேலது., ப.153
7. மேலது., ப.619
8. மேலது., ப.697
9. மேலது., ப.110
10. மேலது., ப.217
11. மேலது., ப.117

## துணைநின்ற நூல்கள்

1. இளம்பூரணர் உரை - தொல்காப்பியம்
சாரதா பதிப்பகம்,
சென்னை,
முதற்பதிப்பு, 2005.

2. வ.த.இராம.சுப்பிரமணியம் - ‘தண்டியலங்காரம்’,
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை,
முதற்பதிப்பு, 1999.

3. வி.மரியஅந்தோணி - ‘தேம்பாவணி’,
வீரமாமுனிவர் ஆய்வுக்கழகம்,
தூய சவேரியார் கல்லூரி,
பாளையங்கோட்டை,
முதற்பதிப்பு,1982.

குறிப்பு : இலக்கியச்சுவை உணர்த்தும் கட்டுரை.



Scanned by CamScanner